30 மார்ச் 2015

அன்பு போதகர்களே, மூப்பர்களே, சபைத்தலைவர்களே

**ஆர்டருக்கு ஆயத்தம் : 2015ன் 40 நாள் உபவாச ஜெப கையேடு**

மேற்சொன்ன கையேடு, ஆர்டருக்கு ஆயத்தமாய் இருக்கிறது. 2001ல் துவங்கியதிலிருந்து இந்த 40 நாள் உபவாச ஜெப கையேடு 15வது பதிப்பாக வெளிவருகிறது. **"என்னில் நிலைத்திரு"** எனும் கருப்பொருளிலின் அடிப்படையில் இது எழுதப்பட்டது. சற்று வேறுபட்ட கோண அணுகுமுறையில் தயாரிக்கப்பட்ட இது தியான மற்றும் சுய பிரதிபலிப்போடு தேசத்தின் குறிப்பட்ட ஜெப நோக்கத்தைக் கொண்டதாகும். திட்டமாக இது தனிப்பட்ட தியானத்திற்கும், தேசத்திற்காக மன்றாடும் ஜெப வழிகாட்டியாக அமையும் என்பது திண்ணம்.

இறுதி நேர ஆர்டர் மற்றும் தாமதமாக கிடைக்கப்பெறும் சிக்கலைத் தவிர்ப்பதற்கும் நீங்கள் முன்னதாகவே ஆர்டர் செய்யுமாறு உற்சாகப்படுத்தப்படுகிறீர்கள். அச்சடிப்பு மற்றும் அனுப்புகிற செலவுத்தொகை அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்பட்டாலும், கையேட்டின் விலையில் மாற்றமிராது. பெரும்பாலானோர் தங்கள் சொந்த நகலாக பெற்றுக்கொள்ளவேண்டுமென இப்படி செய்யப்படுகிறது.

இந்த ஜெப கையேட்டு பதிப்பகத்தின் வழி அநேகரை ஜெபத்தில் இயக்க எண்ணங்கொண்டுள்ளோம். தேசத்திற்காக மன்றாடும் அவசரம் மற்றும் அவசியம் இந்நாட்களில் அதிகரித்துள்ளது. இந்த நோக்கத்தை அடைய 2 வழிகளில் உதவலாம்:

1. மேற்கொண்டு ஜெபக் கையேடுகளை வாங்கி இன்னும் இந்த இயக்கத்தில் பங்குபெறாத கிறிஸ்தவர்களுக்கு விநியோகிக்கலாம். அல்லது
2. இக்கையேடுகளை தங்களுக்கும் தங்கள் சபைகளுக்குமென ஆர்டர் செய்ய விரும்புகிறவர்களுக்கு இந்தத் தகவலை அனுப்பலாம்.

இதனுடன் ஒட்டி அனுப்பியிருக்கும் ஆர்டர் பாரத்தைப் பயன்படுத்தவும். உங்கள் பணத்தை செலுத்தும்போது அனுப்பும் முறையை துல்லியமாய் பின்பற்றவும்.

நன்றி, தேவன் உங்களை ஆசிர்ர்வதிப்பாராக

அவருடைய சேவையில்

சங்கை ஏண்டி ச்சி
உதவி பொதுச்செயலாளர்
என்.இ.சி.எப் மலேசியா